ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 15
சித்திரை 1 – 30
2022

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

எம்மவர்களுக்கு வணக்கம்.

இந்த மாதம் எமது சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய மகோற்சவம் மிகச்சிறப்பாக நடை பெற்று முடிந்துள்ளது. திருவிழா வந்தாலே எமது ஊரவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தான். தூர தேசங்களில் வசிக்கும் எம்மவர்கள் திருவிழா என்றால் எமது ஊருக்கு வந்து உறவினர்களோடு தங்கி திரு விழாக்காலத்தில் கோயிலுக்கு சமூகமளித்து அனைவரும் இன்பமாக பொழுதைக் கழிப்பார்கள். உறவுகள் அனைவரும் ஒன்றாகச் சங்கமிக்கும் இடமாக எமது ஆலயம் விளங்குகின்றது.


எமது கிராமமானது கல்வியாளர்கள் நிறைந்து காணப்படுகின்ற கிராமமாக காணப்படுகின்றது. பல்வேறு பட்ட வெளியூரவர்களும் தமது கல்வித் தேவையின் பொருட்டு நமது ஊரவர்களிடம் அடிக்கடி வந்து செல் கின்றார்கள். அத்துடன் எமது மைதானம் வடமராட்சியில் மிகப் பெரியதொரு மைதானமாக விளங்குகின்ற காரணத்தால் மாவட்டமட்ட, பிரதேச மட்ட போட்டிகள் பல எமது மைதானத்தில் நடைபெற்று வருகின்றது இதன் காரணமாகவும் பல வெளியூரவர்கள் எமது கிராமத்துக்கு வந்து போகின்றார்கள். எமது கிராமத்தை அழகாக வைத்திருக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். எமது வீடுகளுக்கு முன்னால் உள்ள வேலி, மதில் ஓரங்களில் வளரும் புற்கள், பற்றைகளை வெட்டி அகற்றி கூட்டித் துப்பரவாக வைத்திருக்க வேண்டும். ஒடுங்கிய வீதிகளில் எமது வீட்டு மதில் ஓரங்களின் முன்னால் பூ மரங்கள் வைப்பதைத் தவிர்ப்போம். நமது ஊரில் தற்போது பல வீடுகளின் மதில் ஓரங்களில் பூக்கன்றுகள் வைத்துள்ளார்கள். இப்பூக்கன்றுகள் வீதியில் சரிந்து போக்குவரத்துக்கு இடைஞ்சலாக காணப்படு கின்றது. இன்று விபத்துக்கள் அதிகரித்து வருகின்ற காலமாகும். நாம் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். மதில் ஓரங்களில் பூக்கன்றுகளை வைப்பவர்கள் அது வீதிக்கு செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எமது வீட்டு வளவுடனான காணியாயினும் பொது நோக்கு அனைவருக்கும் அவசியமாகும். மேலும் எமது வீட்டு கழிவு நீரை வெளியில் விடாது பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் எமது மதில்களை அண்டிய பகுதிகளை சுத்தமாக வைத்திருந்தால் ஊர் அழகு பெறும். ஊர் அழகு பெற்றால் நம் அனைவருக்கும் தான் பெருமை.

- க.பரணீதரன்


**எம்மை நாம் தான் சுத்தப்படுத்த வேண்டும்.**

## உள்ளே...

**அல்வாய்க்கிராமத்தின் முதலாவது பொறியியலாளர்**
**அமரர் தாமு பேரின்பநாதன்**




**முன்னணி உதைபந்தாட்ட வீரர்**
**இ.இராசரத்தினம்(கீசிங்கர் சு.சு)**



**“அடங்காப்பிடாரி” நாடக புகழ்**
**கலாபூஷணம் சிவநாமம் சிவநேசன்**



**மனோகரா அணியின் முன்னாள்**
**ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்**
**வே.விஜயநாதன்**




**எமதூர் பற்றிய மீள் நினைவு**
**” அழகிய அந்தக் காலம்”**

**அஞ்சலி**
**திருமதி மதுரைத்தேவி அந்தோணிமுத்து**

**எம்மவர்கள் சிறுகதை – 4**
**“தவறுக்காக அல்ல” – க.தர்மதேவன்**

**தொடர்புகளுக்கு:**
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# அல்வாய்க் கிராமத்தின் முதலாவது பொறியியலாளர் அமரர் தாமு பேரின்பநாதன்

■ கலாநிதி த.கலாமணி

செல்வத்தைப் பெரிதாக மதிக்கும் இந்நாளில் "கல்வியே கருந்தனம்" என்ற கொள்கையில் நின்று, கல்வியால் உயர்ந்து, நிறைந்த செல்வமும் பெற்று, எமது ஊருக்கே வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர் தான் அமரர் தாமு பேரன்பநாதன். கொக்கட்டியா வளவைச் சேர்ந்த தாமு பொன்னம்மா தம்பதியினரின் உத்தம புத்திரனான இவருக்கு ஐந்து சகோதரிகளும் ஒரு சகோதரனும் உடன் பிறப்புகள்.

அமரர் பேரின்பநாதன் அவர்கள் ஆரம்பக் கல்வியை யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் கனிஷ்ட இடைநிலைக் கல்வியை யா/கரவெட்டி விக்னேஸ்வரராக் கல்லூரியிலும் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றுக் கொண்டார். கணிதத் துறையில் கல்விகற்ற இவர் கட்டுப்பெத்த தொழில்நுட்பக் கல்லூரிக்கு தொழில் நுட்ப பாடநெறிக்குத் தெரிவாகி, பரீட்சையில் சித்தி பெற்று கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தராக (J.T.O) நியமனம் பெற்றார். இந்த நியமனத்தோடு நின்றுவிடாமல், உத்தியோகம் பார்த்துக் கொண்டே மேலும் படித்து, இலண்டனை தலைமைச் செயலகமாகக் கொண்ட இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினூடாக குடிசார் பொறியியலாளர் (Civil Engineer) என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இந்த வகையில் எமது அல்வாய்க் கிராமத்தின் முதலாவது பொறியியலாளர் என்ற பெருமையையும் இவர் பெறுகின்றார்.

அமரர் பேரின்பநாதன் சிறந்த விளையாட்டு வீரனாகவும் விளங்கியவர். பாடசாலைக் கல்விக் காலத்திலேயே இவர் சிறந்த தடகள வீரராகத் திகழ்ந்தவர். உயரம் பாய்தல், தடியூன்றிப் பாய்தல் ஆகிய விளையாட்டுகளில் இவர் வல்லவர். இவர் நெல்லியடி மத்தி மகா வித்தியாலயத்தில் சிரேஷ்ட இடைநிலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். பாடசாலை விளையாட்டுப் போட்டியில் தடியூன்றிப் பாயும் போது, உயரச் சென்று லாவகமாக உடலை வளைத்து தடைச்சட்டத்துக்கு (Bar) அப்பால் அவர் வீழ்ந்து கொண்டிருக்கும் காட்சியை திகைப்புடன் வியந்து பார்த்துக் கொண்டமை இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது. இலங்கைப் பாடசாலைகளிடையே தேசிய மட்டத்தில் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் சாதனையைப் பதிவு செய்து (Record) நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்குப் பெருமை சேர்த்தவர் இவர். பாடசாலை உதைபந்தாட்ட அணி, அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட அணி என்பவற்றின் முன் அரங்க வீரராக (Forward Player) விளையாடி வெற்றிகளைப் பெற்றுத் தந்தார்.

அந்நாளிலே எமது கிராமம் வறுமைப்பட்ட கிராமமாகவே விளங்கியது. விவசாயத்திற்கு வேண்டிய நீர், நில வளமின்மை, பொருளாதார வளமின்மை என்பன காரணமாக எமது கிராம மக்கள் வேறு தொழில்களை நாட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர். ஆயினும், 1800களின் பிற்கூறிலேயே எமது கிராமத்தில் ஏற்பட்ட கல்வி, கலை, கலாசார மறுமலர்ச்சி எமது கிராாமத்தவர்களை கல்வியிலும் கலைகளிலும் நாட்டம் கொள்ளச் செய்தது. திண்ணைப்பள்ளி, சமயப்பிரசங்கங்கள், தேவரையாளி சைவ வித்தியாசாலையின் உதயம் ஆகியன கல்வி மீதும் கலைகள் மீதும் எமது கிராமத்தவர்கள் அதிக நாட்டம் கொள்வதற்கு ஏதுக்கள் ஆயின. இந்நிலைகள் எமது கிராமத்தவர்கள் ஆசிரியர்களாகப் பரிணமிப்பதற்கு வடிகாலாயின. இவ்வாறு ஆசிரியர்கள் உருவானமை எமது கிராமத்தில் மேலும் கல்வி மலர்ச்சி பெறுவதற்கு உந்து கோலாகியது. எமது கிராமத்துப் பிள்ளைகள் உயர்கல்விக்காக வேறுபாடசாலைகளுக்குச் சென்றவேளை சாதிய ஒடுக்குமுறைகள் மேலோங்கியிருந்தன. ஆயினும்,

இவற்றைத் தாங்கிக் கொண்டு, எம்மவர்கள் கல்வியில் வெற்றிகளைப் பெற்று அரச உத்தியோகங்களையும் பெறத்தொடங்கினர்.

அமரர் பேரின்பநாதன் அவர்களும் பாடசாலைக் கல்விக் காலத்திலே வறுமைப்பட்ட சூழலிலேயே வளர்ந்தார். கல்வியினாலே கிடைக்கக்கூடிய எதிர் காலத்தை மனதிற் கொண்டு கல்விமீது மிகுந்த கரிசனை காட்டினார். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும், இவரின் அண்ணனான தாமு வீரசிங்கம் அவர்களை முன்மாதிரி யாகக் (Role Model) கொண்டு, அவரின் வழிகாட்டலிலும் அனுசரணையிலும் இவர் கல்வியில் முன்னேறினார். ஓய்வு பெற்ற அதிபர் திரு தா.வீரசிங்கம் அவர்களே எமது ஊரிலிருந்து முதன் முதலில் ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர் நியமனத்தைப் பெற்றவர் என்ற பெருமையும் இவர்களின் குடும்பத்திற்கே உரியது.


அமரர் பேரின்பநாதன் அவர்களின் தந்தையார் தாமு அவர்களும் எனது அம்மாவின் தந்தையார் வேலுப்பிள்ளை அவர்களும் உடன் பிறந்த சகோதரர்கள். அம்மாவின் தந்தை, தாய் சந்ததி வழியில் அம்மாவே மூத்த பெண்பிள்ளை என்பதால் தந்தைவழித் தாய்வழிச் சகோதரர்கள் மைத்துனர்கள், மைத்துனிகள் யாவரும் அம்மாவை "மூத்தக்கா" என்றே பாசத்துடன் அழைத்து வந்தனர். இந்த உறவுநிலை காரணமாக நான் அமரர் பேரின்பநாதன் அவர்களை "மாமா" என்றே அழைத்து வந்தேன்.

பேரின்ப மாமா கட்டுப்பெத்த J.T.O பாடநெறியை முடித்து உத்தியோகத்திற்காகக் காத்திருந்த வேளை நான் க.பொ.த உயர்தரத்தில் முதலாம் வருடமாணவனாக இருந்தேன். தான் வேலைக்குப் போகும் வரை எனக்கு உயர் கணிதம் சொல்லித்தருவதாக, எங்கள் வீட்டுக்கு வந்திருந்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர் எனக்குச் சொன்னார். ஆனால் அதிகாலை நான்கு மணிக்கே தங்களுடைய வீட்டுக்குப் படிக்க வரவேண்டும் என்று நிபந்தனையும் கூறினார். நான் அதிகாலையிலேயே எழுந்து ஒரு லாம்பும் கொண்டு அவர் வீட்டுக்குச் சென்று வந்தேன். அங்கு சென்றதும் அவர் ஒரு கை விளக்கை கொளுத்தி வைப்பார். அந்த வெளிச்சத்தில் "நுண் கணிதம்" என்ற கணிதப் பிரிவை எனக்குச் சொல்லித் தந்தார். ஒரு கிழமை தான் படித்திருப்பேன். பேரின்பமாமாவுக்கு நியனக் கடிதம் வந்துவிட்டது. அவர் கொழும்புக்குச் சென்று விட்டார். அந்த ஒரு கிழமையைத் தவிர முன் எப்போதும் சரி பின்பும் சரி நான் யாரிடமும் "ரியூசனுக்காகச்" சென்றதில்லை. ரியூசனுக்குச் செல்வதற்குரிய வசதியும் எனக்கிருக்கவில்லை.

முதலில் அமரர் பேரின்பநாதன் அவர்கள் புத்தளத்தில் கட்டட மேற்பார்வையாளராகவும், அடுத்து அம்பாறை ஹார்டி (Hardi) தொழில்நுட்பக் கல்லூரியில் போதானசிரியராகவும், பின்னர் பூகொடை ஆடை உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகவும் கடமையாற்றினர். அதன் பின்னர் 1977இல் இலங்கை வங்கித் தலைமைக் காரியாலயத்தில் உதவிப் பொறியியலாளராகவும் பின்பு சிரேஷ்ட பொறியியலாளராகவும் பதவி வகித்து, 2001 இல் தலைமைக் காரியாலயத்தில் பிரதிப் பொது முகாமையாளர் என்ற பதவிநிலைக்கு உயர்ந்து 2002இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னரும் "ATP கட்டட ஒப்பந்தகாரர்" எனும் நிறுவனத்தை நிறுவி நிர்மாணப் பணிகளை யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற் கொண்டு வந்தார்.

பேரின்பநாதன் அவர்கள் சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த இராசசிங்கம் - பிள்ளையம்மா தம்பதியினரின் புதல்வியான லோகேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்து, சிவலோஜினி, பத்மலோஜினி ஆகிய புதல்வியரைப் பெற்றெடுத்து செல்வச் சிறப்போடு சிறப்பாக வாழ்ந்து வந்தார். உரிய திருமண வயதில் பிள்ளை களுக்குரிய வரன்களையும் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தார். இதனால் பேரப்பிள்ளைகளையும் பெற்று தமது இறுதிக்காலம் வரை மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் தொடர்ந்து உறவுகளைப் பேணி வந்தவர் என்ற வகையில் இவருக்கு எப்போதும் மதிப்பும் மரியாதையும் இருந்தது.

அமரர் பேரின்பநாதன் அவர்கள் மனோகரா சனசமூக நிலையத்தின் வளர்ச்சியிலும் பல வழிகளிலும் உழைத்தவர். அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் ஏழாந்திருவிழா உபயகாரராக விளங்கிய இவர், ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவி, நிதிப் பங்களிப்பும் நல்கி, முக்கியமான ஆலயநிர்மாணப் பணிகளின் போது இலவசமாக துறைசார் ஆலோசனை களையும் வழங்கி வந்தார். எமது ஆலயம் மகோற்சவம் காணவேண்டும் என்ற பேரவா எங்கள் ஊரவர் மத்தியில் எழுந்தபோது, அண்ணன் திரு.வீரசிங்கம் குடும்பத் தினருடன் சேர்ந்து, கொடித்தம்பம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதில் தனது பங்களிப்பையும் வழங்கினார். பஞ்சதள இராஜகோபுரம், தேர் ஆரோஹண மண்டபம் முதலிய வற்றுக்கான திட்டப்படங்களை வரைந்து மேற்பார்வையுடன் ஆலோசனையையும் வழங்கி வந்தவர் இவர். 15.11.1941 இல் பிறந்து 13.01.2018 இல் அமரத்துவம் அடைந்து 76 வருடங்கள் இப்பூலகில் வாழ்ந்தவர் அமரர் பேரின்பநாதன் அவர்கள். ஊரவருடனும் உறவுகளுடனும் பாசத்தோடு அன்பு பாராட்டி, எவரையும் மதித்துப் பழகும் பண்பை எப்போதும் கொண்டிருந்த வகையிலும் வாழ்க்கையில் நம்பிக்கையோடு முன்னேறி உயர்ந்து உயர் பதவிகளிலும் செல்வநிலையிலும் விளங்கிய எமது கிராமத்தின் ஒரு முன்மாதியாளராகத் திகழ்ந்து எமது கிராமத்துக்குப் பெருமை சேர்த்தவர் என்ற வகையிலும் அமரர் தாமு பேரின்பநாதன் அவர்கள் ஓர் ஆதர்ஸ புருஷராக எமது உள்ளங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்.



# முன்னணி உதைபந்தாட்ட வீரர் இ.இராசரத்தினம்(கீசிங்கர், R.R)

க.பரணீதரன்

அல்வாய் மனோகராக்கிராமத்தில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் குறிப்பிடத்தக்க ஆளுமைகளாக விளங்கி வருகின்றார்கள். உடல் அழிவுற்றாலும் அவர்கள் விட்டுச்சென்ற நினைவுகள் எம்மக்கள் மத்தியில் பசுமையாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் உதைபந்தாட்டத்தில் மனோகராவின் பிரபல்யமான வீரராக விளங்கியவர் தான் இராசா இராசரத்தினம் அவர்கள். அல்வாயில் சங்கரியப்பா வீடு என அழைக்கப்பட்ட ராஜ்பவன் இல்லத்தில் **1937.02.17** இல் இராசா தங்கம் அவர்களின் இல்லறப்பேறின் பயனாக மூத்த மகனாக இராசரத்தினம் அவர்கள் பிறந்தார். ஆரம்பக்கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் கல்லூரியிலும் இடைநிலைக்கல்வியை திரு இருதயக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்திலும் பெற்ற இவர் உயர் கல்வியை யாழ் மத்தியகல்லூரியில் பெற்றுக் கொண்டார். பாடசாலைக்காலத்திலே கல்வி விளையாட்டு என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்த இவர் சிரேஷ்ட தராதரக் கல்வி வரை கற்று சித்தி பெற்றார். குடும்ப நிலையை கருத்திற் கொண்டு கல்வியை நிறுத்திக் கொண்ட இவர், கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் எழுதுவினைஞராக உத்தியோகம் பெற்றுக் கொண்டார். அங்கு வேலை செய்த காலத்தில் அனைவருடனும் மிக அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்ட இவர் பல்வேறு பதவிகள், பொறுப்புகளையும் பெற்று அவற்றை சீராக செயற்படுத்தி வந்தார். "அன்றைய கால கட்டத்தில் நிலவிய சமூக பொருளாதார ரீதியான அடக்குமுறைகளுக்கெதிராக குரல் கொடுத்து நடுநிலைக் கொள்கை வழி நின்று பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்ற கனவான்" என இவரை மாகாண பொது நிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளர் க. கனகரத்தினம் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தகுந்தது. இவரது தம்பியாரான திரு இ.விஜயரத்தினம் அவர்கள் தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபராக பதவி வகித்தவர். அவர் கல்வியில் முன்னேற பக்கபலமாக இருந்து உவகை அடைந்தார்.

தனத்தியவத்தை குறிச்சியைச்சேர்ந்த பொன்னையா பொன்னம்மா தம்பதிகளின் மகளான கிருஷ்ணேஸ்வரி அவர்களை மணம் முடித்துக் கொண்ட இவர் இன்பமான வாழ்க்கை வாழ்ந்து கிருஸ்ணகுமாரி, ராஜன், ரஞ்சன், ரங்கன், மேனகா என ஐந்து மகவுகளை பெற்றுக் கொண்டார். சுயமுயற்சியால் வறுமையைக் கண்டு அஞ்சாது தன்மீது நம்பிக்கை கொண்டு உயர்வடைந்ததுடன் தன் பிள்ளைகளுக்கும் நம்பிக்கையுடன் தொடர்ச்சியாக நல்லவை நோக்கி எமது பயணத்தை தொடர்ந்தால் முன்னேறலாம் என்ற படிப்பினையைக் கற்றுக் கொடுத்தார். பிள்ளைகளை பொறுப்புடன் வளர்த்து அவர்களது பொருளாதார மேம்பாட்டுக்கு வழி சமைத்து நல்ல கல்வி புகட்டி அவர்களை சிறப்புற வாழ வழி சமைத்துக் கொடுத்தார்.

விளையாட்டிலும் மற்றும் பொது விடயங்களிலும் மிகத்தெளிவுடனும் புத்தி சாதுரியத்துடனும் செயற்பட்டு ஆலோசனைகளை வழங்கி பிரச்சினைகளை தீர்த்து வைக்கக் கூடிய ஆற்றல் படைத்த காரணத்தால் இவரை எம்மூரவர்கள் "கீசிங்கர்" என அன்பாக கௌரவப்படுத்தி அழைத்து வந்தார்கள். கூடுதலான சமயங்களில் வெள்ளை வேட்டியும் வெள்ளை சேட்டுமாக இவர் வெளியிடங்களுக்கு சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் மனோகரா அணிக்காக விளையாடிய காலத்தை "மனோகராவின் உதைபந்தாட்டத்தின் பொற்காலம்" என எம்மவர்கள் கொண்டாடுவது நாம் அனைவரும் அறிந்ததே.

இவர் வலது பக்க முன்னணி வீரராக மைதானத்தில் செயற்பட்டார். இ.இராசரத்தினம் அவர்களுடன் இ.சாம்பசிவம், இ.கந்தவனம், ச.நாகேந்திரன், இ.இரத்தினராசா, க.இராசையா, க.பாக்கியராசா, வ.ஜெயராசா, க.பரமானந்தன், ந.இராசரத்தினம், மா தங்கவடிவேல், ந.சின்னராசா, மு.தங்கவேல், க.மங்களேஸ்வரன் என அற்புதமான வீரர்கள் இணைந்து விளையாடிய ஒரு அணியாக எமது மனோகரா விளையாட்டுஅணி விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு போட்டி களின் போது மனோகரா தோல்வியின் விளிம்பில் நின்ற சமயங்களில் இவரது புத்தி சாதுரியமான ஆலோசனைகள், செயற்பாடுகள் காரணமாக மனோகரா அணி தோல்வியில் இருந்து தப்பித்த தருணங்களும் உண்டு. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய பத்தாம் திருவிழா உபயகாரராக விளங்கியவர்.

சமூக நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்புகளை நல்கியதோடு எல் லோருடனும் இனிமையாக பழகி எம்ஊரவர்களின் நெஞ்சில் இடம்பிடித்துக் கொண்டார் இ.இராச ரத்தினம் அவர்கள்.




## அஞ்சலி
## திருமதி மதுரைத்தேவி அந்தோணிமுத்து
## 1947.02.28 – 2022.04.29

எமது கிராமத்தின் மயிலிட்டிக் குறிச்சியில் வாழ்ந்து வந்த கணபதிப்பிள்ளை கதிராசி (முத்துக்குட்டி) தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக 1947.02- 28ம் திகதி மதுரைத்தேவி அவர்கள் இவ்வுலகில் உதித்தார். இவரது உடன்பிறப்புகள் பாலசண்முகம், திருமதி கெங்காதேவி இராசரத்தினம், திருமதி புனிதவதி திருநாவுக்கரசு. திருமண வயது வந்தபோது முல்லைத்தீவைச் சேர்ந்த பர்ணாந்து மாணிக்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனாகிய அந்தோனிமுத்து (அன்ரன்) அவர்களை கரம் பிடித்து ஜீவா, பத்மா, அன்ரன் அல்பிறேட், பத்மலீனா, தேவமதன், தேவகனிஸ்ரன் ஆகியோர்களை மக்கட் செல்வங்களாகப் பெற்றுச் சிறிது காலம் அல்வாய்க் கிராமத்திலும் பின்பு தனது கணவரின் சொந்த ஊரான முல்லைத்தீவிலும் நிரந்தரமாக வசித்துவந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக புலம்பெயர்ந்து இந்தியாவில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு தசாப்துக்கு மேலானா ஆண்டுகள் இந்தியாவில் வசித்து பின்பு இலங்கைக்கு வந்து வவுனியா சிதம்பரபுரத்தில் குடும்பத்தோடு வசித்து வந்த வேளையில் சுகயீனம் காரணமாக அமரது கணவர் இவ்வுலகை விட்டு சென்றதனால் மிகுந்த துன்பங்களுக்கு ஆளாகியிருந்தார். பிள்ளைகள் எல்லோரையும் வளர்த்து வந்ததோடு மகள் பத்மலீனாவை ஆசிரியையாகக் கண்டு மகிழ்ந்திருந்தார். பேரப் பிள்ளைகளையும் மிகுந்த கவனத்தோடு வளர்த்து வந்தார். அதன் பயனாக பேரமகன் சயேந்திராவை ஒரு கலைப்பட்டதாரியாக்கி அரச சேவையில் அமர்த்தி இன்புற்றிருந்தார். பூட்டப்பிள்ளையையும் கண்டு முழுமையான வாழ்க்கையை வாழ்ந்தது மட்டுமல்லாமல் வவுனியா ஆச்சிபுரத்தில் கல்வீடு அமைத்திருந்தார்கள். தொற்றாநோய்த் தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்டு வவுனியா ஆச்சிகுளத்தில் வசிக்கும் இளைய மகளான பத்மலீனா (ஆசிரியை) அவர்களின் இல்லதத்தில் 2022.04.29 வெள்ளிக்கிழமை இறைவனின் பாதாரவிந்தங்களைச் சென்றடைந்தார்.

– க.வரதவேல்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டு கழகம் வடமாகாணத்திற்கு உட்பட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் எமது அல்வாய் மனோகரா அணி இளவாலை சென்லூட்ஸ் அணியை எதிர்த்து விளையாடி 2 ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இச்சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக பி.சாருஜன் தெரிவு செய்யப்பட்டார்.



# "அடங்காப்பிடாரி" நாடக புகழ் கலாபூஷணம் சிவநாமம் சிவநேசன்

■ க.பரணீதரன்

எமதூருக்கு கிடைத்த பெரும்வளமாக நாடகம் விளங்கியது. எமதூரானது பல்வேறுபட்ட புகழ் பெற்ற நாடக நடிகர்களைக் கொண்ட ஊராகக் காணப்படு கின்றது. கலையால் மக்களை சந்தோசப்படுத்தியவர்கள் எம்மவர்கள். இசை நாடகங்கள், கூத்துக்கள், சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், குறியீட்டு நாடகங்கள், ஹாஸ்ய நாடகங்கள் என பல வகைப்பட்ட நாடகங்களையும் ஆடக்கூடிய வல்லமை பெற்றவர்க ளாக எம்மவர்கள் விளங்கினார்கள். சமூகத்துக்கு ஒரு நற்செய்தியை சொல்லும் நோக்குடன் சமூக நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வருகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் 2000 மேடைகளுக்கு மேல் அரங்கேறி மக்கள் மனதைக் கொள்ளை கொண்ட "அடங்காப்பிடாரி" என்ற நாடகத்தில் 300 மேடை களுக்கு மேல் அடங்காப்பிடாரியாக நடித்து புகழ் பெற்றவர் தான் சிவநாமம் சிவநேசன் அவர்கள்.

சிவநாமம் நவமணி தம்பதிகளுக்கு மூத்த பிள்ளையாக **1946.05.13** இல் சிவநேசன் அவர்கள் பிறந்தார். சிவதாசன், ஜெயராசா, சந்திராதேவி, சத்திய குமாரி, பவானி என ஐந்து சகோதரங்கள் இவருக்கு கிடைக்கப்பெற்றது. ஆரம்பக்கல்வியை அரியாலை ஆனந்தா வித்தியாசாலையிலும் பின்னர் யா/கனக ரத்தினம் மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்ற இவர் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு தன் கல்வியை ஆண்டு 8 உடன் நிறுத்திக் கொண்டு மேசன் தொழிலுக்குச் சென்றார். தன் குடும்பத்திற்காகப் பொறுப்பாக வேலைக்குச் சென்று நல்ல உழைப்பாளி யாக விளங்கினார். ஸ்ரீமனாதேவி அவர்களை காதல் திருமணம் செய்து கொண்டார்.

இவர் சிறுவனாக இருந்த காலத்தில் அரியாலை புங்கங்குளம் சனசமூக நிலையத்தில் அடிக்கடி நடைபெறும் நாடகங்களை காணும் சந்தர்ப்பம் இவருக்கு வாய்த்தது. யாழ்ப்பாணத்தின் பிரபல நடிகர்களான ஏ.குமரையா, ஐ.எஸ்.சண்முகன், ஆர்.ராம நாதன் போன்றவர்களது நாடகங்கள் அங்கு அதிகமாக மேடையேற்றப்பட்டன. குறித்த நடிகர்களது நடிப்பைக் கண்டு ஆனந்தம் கொண்ட சிவநேசன் அவர்கள், அவர்களைப்போல நடிக்க ஆசைப்பட்டு தன் வீட்டு கண்ணாடி முன் நின்று நடித்தும் ஆடியும் பாடியும் மகிழ்வுற்றார். அத்துடன் இவர் வாழ்ந்த அரியாலை ஸ்ரீகலைமகள் பிரதேசத்தில் கலைமகள் நாடகமன்றத்தினரும் தொடர்ச்சியாக நாடகங்களை மேடையேற்றி வந்தார்கள். அவர்களது ஆற்றல்களைக் கண்டு இவர் வியந்து தானும் நடிகனாகவேண்டும் என ஆசை கொண்டார். ஆனால் இவரை குறித்த காலத்தில் யாரும் நடிக்க அழைக்கவில்லை. இவர் மனம் சோர்ந்து போகாமல் தனது 14 வயதில் தானாகவே "சதிகாரன் நாகப்பா" என்ற நாடகத்தை எழுதி, தயாரித்து, நாடகத்தைப் பழக்கி மேடையேற்றினார். அந்த நாடகம் இவருக்குள் இருந்த நாடகத்திறமையை வெளியுலகிற்கு எடுத்துக் காட்ட ஊரவர்கள் இவரைப்பாராட்டி உற்சாகம் கொடுத்தார்கள். மேற்குறித்த நாடகத்தைப் பார்த்த தம்பு பாலசிங்கம், கந்தசாமி ஆகியோர் தமது நாடகமான "மணி மகுடம்" நாடகத்தில் இவரை நடிக்க வைத்தார்கள். அந்நாடகத்தில் இவர் பிரதான பெண் நாடக வேடமேற்று நடித்தார். அல்வாய் மனோகராவைச் சேர்ந்த சிவபாக்கியம்(வேங்கை) அவர்கள் இவருக்கு ஜோடியாக நடித்தார். குறித்த நாடகத்தில் "அத்தானும் நான் தானே, கொத்தானும் நான் தானே" என்ற பாடலுக்கு இவர்கள் இருவரும் ஆடிய நடனம் பல ஆண்டுகளாக பேசப்பட்டதுடன் மிகுந்த பாராட்டையும் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து பாலசிங்கம் அவர்களின் நெறிப்படுத்தலில் "கடமை வீரன்" என்ற நாடகத்திலும் இவர் பெண் வேடமேற்று நடித்தார். இவருடன் கூடவே செல்வரத்தினம், யோகராஜா போன்ற பிரபல நடிகர்களும் பெண் வேடமேற்று நடித்தார்கள். இந்நாடகத்தில் 4 பாடல்களுக்கு நடனம் ஆடி இரசிகர்களை கவர்ந்தார். இவரது அங்க அசைவுகள், நளினங்கள் என்பன உண்மையான பெண் ஒருவர் நடிப்பது போன்ற உணர்வை இரசிகர்களுக்கு கொடுக்க இவர் தொடர்ச்சியாக பல நாடகங்களில் பெண் பாத்திரம் ஏற்று நடித்தார். கடமைவீரன் நாடகத்தைப் பார்த்த சுண்டிக்குளி யாழ் நாடகமன்றத்தின் இயக்குநர் வீ.சி.குஞ்சிதபாதம் இவரது நடிப்பைக் கண்டு பாராட்டியதோடு தமது நாடக மன்றத்திலும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பும் விடுத்தார்கள். "குற்றம் எங்கே" என்ற நாடகத்தில் நடித்தார். இந்நாடகம் நவாலி சென்பீற்றர் ஆலய அரங்கில் மேடையேற்றப்பட்டது.

இந்நாடகம் பல மேடைகள் ஏறியது. அரிச்சந்திர மயான காண்டம் நாடகத்தில் கால கண்டியாக நடித்தும் பாராட்டைப் பெற்றார்.

அடங்காப்பிடாரி நாடகம் யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபலமாக நடந்தேறி வந்த காலத்தில் இவருக்கு அந்நாடகத்தில் அடங்காப்பிடாரி யாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. கிடைத்த வாய்ப்பை மிகச்சரி யாகப் பயன்படுத்திக் கொண்டு தன் நடிப்பை சிறப்பாக வெளிப்படுத்தி இரசிகர்கள் பலரது மனதில் இடம் பிடித்துக் கொண்டார். பல்வேறு மேடைகளில் இவரை பெண் எனவே பலர் நினைத்த சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன.( திருகோணமலையில் இந்நாடகம் நடை பெற்ற சமயத்தில் இவரை உண்மையில் பெண் எனவே நினைத்தார்களாம், நாடகம் முடிந்ததும் நாடகத்தில் நடித்த பெண்ணை பார்க்க பலர் தேடி வந்தார்களாம், அது போல ஒரு சமயம் நாடகம் முடிந்து வரும் வழியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இவரை பெண் என நினைத்து அங்க சேஷ்டை புரிய முனைந்தாராம்) இவருடன் வீ.சீ.குஞ்சிதபாதம், வீ.சீ.பரமானந்தம், கனகையா, நடராஜா போன்ற நடிகர்கள் நடித்தார்கள். இந்நாடகத்திற்கு கவிஞர் வே.ஐயாத்துரை பாடல்கள் எழுதினார். “அடங்காப்பிடாரி நாடக கோஷ்டி” என்ற பதாகையுடன் தினமும் 1960 களின் முற்பகுதியில் இந்நாடகம் யாழின் பல பகுதிகளிலும் மேடை யேறியது. இந்நாடகம், பல இரவுகள் இரண்டு இடத்தில் மேடையேற்றம் கண்டதும் உண்டு. இந்நாடகம் பின்னாளில்இலங்கையின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றம் கண்டது. இந்நாடகம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகின. குறிப்பாக ஈழநாடு பத்திரிகையில் சிவநேசன் அவர் களது நடிப்பு பற்றிய வெகுவாகப் பாராட்டப்பட்ட கட்டுரை வெளியானது. 1992 ஆம் ஆண்டு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய சிவ ராத்திரி தினத்தன்று “கறந்தாண்டா பத்தாயிரம்” என்னும் நகைச்சுவை சார்ந்த சமூக நாடகத்தை மேடை யேற்றினார். குறித்த நாடகத்தில் சின்னராசா, அழகானந்தன், அனந்த ராஜன் போன்றோர் இவருடன் இந் நாடகத்தில் நடித்தார்கள். காத்த வராயன் கூத்தில் மயிலு கணேச லிங்கம் அவர்களுடன் முத்துமாரி யாக நடித்துள்ளார். இந்நாடகத்தில் இவர்களுடன் அனந்தராஜன், வீரராசா, பரம்சோதி போன்ற





எம்மவர்கள் நடித்துள்ளார்கள். இவ்வாறாக இவர் ஒரு சிறந்த ஒரு நடிகராக விளங்கி பலரது பாராட்டையும் புகழையும் பெற்றுக் கொண்டார்.

கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களது கவிதைகளை வாசித்து கவிதை எழுதும் ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது. ஆரம்ப காலத்தில் பல கவிதைகளை எழுதி கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களிடம் காண்பித்து அவற்றை பற்றிய கருத்துகளை பெற்று தன்னை சீரமைத்துக் கொண்டார். இவரது முதற்கவிதை ஈழநாடு பத்திரிகை யில் 1963 இல் வெளியானது. தொடர்ந்து உதயன், வலம்புரி பத்திரிகைகளிலும் ஜீவநதி, ஞானம் சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் பிரசுர மாயின. கவிதைகள் எழுதுவதோடு ஆலய உற்சவங்கள் நடை பெறும் போது அவ்வாலய கடவுள் பற்றிய பாட்டும் எழுதினார். நல்லைக்குமரன் மலரில் பல ஆண்டுகளாக இவரது பாடல் இடம் பெற்று வருகின்றது. அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையாருக்கு திருபள்ளி எழுச்சிப் பாடல் எழுதி அதனை இறுவட்டாகவும் வெளியிட்டு வைத்தார். அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் பற்றி எழுதி வெளியீடு செய்யப்பட்ட முதலாவது இறுவட்டாக இவரது திருபள்ளி எழுச்சி இறுவட்டு காணப்படுகின்றது. மேலும் நயினை நாக பூஷணி அம்மன், சந்நிதி முருகன், வல்லிபுரக்கோயில் மாயவன், நல்லைக்கந்தன் பற்றிய பல பக்திப் பாடல்களை இவர் இயற்றி உள்ளார். இவரது நாடகத் திறமைக்காக இவருக்கு 2013 ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தார்கள். மேலும் பிரதேச செயலகத்தால் கௌரவிக்கப்பட்டார்.

1992 ஆம் ஆண்டு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவ ராக இருந்த காலத்தில் சிறுவர் பாடசாலை அமைப்பதற்கு நிலையத்துடன் சேர்ந்து இயங்கி வெற்றி கண்டார். 2014 ஆம் ஆண்டு அரியாலை அண்ணமார் ஆலய தலைவராக இருந்து பல நற்காரியங்களை ஆற்றினார். இவரது கவிதைகள் நூலுருப்பெற வேண்டும். நாடக நடிகனாக, கவிஞராக, சமூகச் செயற்பாட்டா ளராக விளங்கும் சிவநாமம் சிவநேசன் அவர்கள் அல்வாய், அரியாலை ஆகிய இரு ஊர் களுக்கும் பெருமை சேர்த்து வருபவர் என்னும் கருத்தில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.



# மனோகரா அணியின் முன்னாள் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் வே. விஜயநாதன்

■ செல்லக்குட்டி கணேசன்

ஐம்பது வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வந்த அரியாலை ஸ்ரீ கலைமகள் விளை யாட்டுக் கழகத்திற்கும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்திற்குமிடையே இடம் பெற்று வந்த சினேக பூர்வ மென்பந்து துடுப் பாட்ட போட்டியின் ஆரம்ப கால விளையாட்டு வீரர்களில் ஒருவரும், வேகப்பந்து வீச்சாளருமான எல்லோராலும் “விஜய்” என்று அழைக்கப்படு கின்ற விஜயலிங்கம் விஜயநாதன் அவர்களின் வாழ்வைப் பதிவு செய்வதில் மிகுந்த மன நிறைவு அடைகிறேன்.

இவர் அல்வாய்தெற்கு குமாரி ஓடையைச் சேர்ந்தவரான வேலு தம்பதியினரின் புதல்வர் விஜயலிங்கம் அவர் மனைவி அல்வாய் தெற்கு இயவராந்தோட்டம் குறிச்சியைச் சேர்ந்த வைத்தி யர் கதிர்காமு மகள் அன்னம்மா தம்பதிகளின் புதல்வர் ஆவார். திருமதி விஜயவேணி குகதாசன், திருமதி விஜயலக்சுமி சிவராசா, விஜய ராசா, விஜயசோதி ஆகியோர் உடன்பிறப்புக் களாவர்.

05.05.1948 ஆம் ஆண்டு பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றவர். கவிஞர் செல்லையா ஆசிரியரின் வேண்டுதலின் பேரில் ஆரம்ப இடை நிலைக் கல்வியை அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா பாடசாலையில் கற்றார். கல்வி கற்கும் காலத்தில் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பல பரிசில்களை தனதாக்கிக் கொண்டவர். உயரம் பாய்தலில் மாவட்ட மட்டப் போட்டியில் இரண்டாவது இடத்தினைப் பெற்று ஸ்ரீலங்கா பாடசாலைக்கு நற்பெயரை எடுத்துக் கொடுத்தார். தந்தையார் வே.விஜயலிங்கம் அவர்களுக்கு ஏற்பட்ட கொடிய நோயின் காரணமாக வீட்டுச் சுமையை தன் தலையில் சுமந்து கொண்டவர் சிறு வயதிலேயே பாடசாலைக் கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தார். என்ன செய்வது என்று அறியாத பருவத்தில் அவரது ஒன்று விட்ட சகோதரன் குழந்தை இரத்தினசிங்கம் அவர்களின் அறிவுரையின் பேரில் பாதணி உற்பத்தித் தொழிலை வதிரிக் கிராமத்தைச் சேர்ந்த பிரேமஞ்சீமா க.தனபால சிங்கம் (Dr. தங்கராசா (பரம்) அவர்களின் அண்ணன்) அவர்களிடம் பயின்றார். மிகக் குறுகிய காலத்தில் தொழிற் தேர்ச்சி பெற்றுவர். 1965 ஆம் ஆண்டு கொழும்பு மருதானையில் பாதணி உற்பத்தித் தொழிற்சாலையை நடாத்தி வந்த வதிரிக் கிராமத்தைச் சேர்ந்த ரவீஸ் வேலாயுதம் அவர் களுடன் சென்று அவரது தொழிற்சாலையில் தொழில் நடவடிக்கையை மேற்கொண்டார். விஷேட தினங்களுக்கு ஊர் திரும்பும் இவர் கரப் பந்தாட்டம் விளையாடுவதில் தனது பொழுதைக் கழிப்பார். இவரது தந்தையார் மிகக் சிறந்த கரப் பந்தாட்ட வீரர் என்பது யாவரும் அறிந்ததே. தந்தை யின் விளையாட்டுத்திறன் இவரில் சுவறியிருப்பது என்பது ஒன்றும் வியப்பிற்குரிய விடயமல்ல. சிறு



வயது முதல் தென்னிலங்கை (கொழும்பு நகரம்) யில் தொழிற்றுறையில் ஈடுபட்டு வந்தவர். சிங்கள மொழியை சரளமாக பேசும் திறனை வளர்த்துக் கொண்டார். இதனால் பல சிங்கள மொழி பேசுவோர் நல்ல நண்பர்கள் ஆனார்கள்.

இவ்வாறு காலம் நகர்ந்து கொண்டு செல்ல திருமண காலமும் பொருந்தி வந்தது. அல்வாய் வடக்கு வயல் குறிச்சியைச் சேர்ந்த ஐயாக்குட்டி சுப்ரமணியம், வைரவி செல்லம்மா தம்பதியினரின் மகள் இராசரத்தினம் அவர்களை 1971ம் ஆண்டு பெரியோர்களின் விருப்பத்தோடு கரம் பிடித்துக் கொண்டார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக ஜெயதீசன், துஷ்யந்தன் ஆகிய இரண்டு ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர்.

தேர்ச்சி பெற்ற தொழிலாளியான இவர் திருமணத்தின் பின்னர் வதிரி கிராமத்தில் உள்ள மன்னா தோட்டம் குறிச்சியிலும், கொழும்பிலும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு தனது குடும்ப பொருளாதாரத்தை வளப்படுத்துவதிலும் பிள்ளைகளின் கல்வியிலும் அதிக கவனமெடுத்துச் செயற்பட்டார். அவற்றில் வெற்றியும் கண்டார். இவரின் வெற்றியில் மனைவியின் பங்கு காத்திரமானது.

இவரின் முதல் வெற்றியின் அடையாளமாக மிளிர்ந்திருப்பது இவரது தாய்க் குறிச்சியான இயவராந்தோட்டம் குறிச்சிக்கு வடக்குப் பக்கமாக இருந்த மேட்டு நில பற்றைக் காணியை கொள்வனவு செய்து அழகான ஒரு கல் வீட்டைக் கட்டி 1983ம் ஆண்டு குடியேறினார். இப் பகுதியில் முதல் முதலில் குடிவந்த குடும்பத்தினர் இவர்களே ஆவர். பின்னர் பல வீடுகள் அவ் இடத்தை அலங்கரிப்பதுடன் வெள்ள வாய்க்காலாக அமைந்த அவ் வீதியானது அண்மைக் காலத்தில் கொங்கிறீற்றாலான வீதியாக வடமராட்சி பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது.

எமது கிராமத்தில் உள்ள சகல அமைப்புகளிலும் தங்களை இணைத்துக் கொண்ட இக் குடும்பத்தினர் எமது கிராமத்தின் செயற்பாடுகள் யாவற்றிற்கும் தங்களது பங்களிப்பை செலுத்தத் தவறியதில்லை. எமது தாய்ச் சங்கமான மனோகரா சன சமூக நிலைய ஆயுட்கால அங்கத்தவரான வே.விஜயநாதன் 2019ம் ஆண்டு எம்மால் ஆரம்பிக்கப்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் சங்க உறுப்பினருமாவார். அதுமட்டுமல்லாமல் தனது மூத்த மகனை ஒரு கலைத்துறை பட்டதாரியாக்கி தனது கல்வித்தாகத்தை தீர்த்துக் கொண்டார். இரண்டாவது மகனும் நல்ல தொழில் முயற்சியாளனாக விளங்குவதோடு மனோகரா விளையாட்டு கழகத்தின் உபைந்தாட்ட நட்சத்திர வீரராக மிளிர்பவர்.

இக் குடும்பத்தினர் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய 4ம் திருவிழா உபயகாரர் ஆவார். தனது வழியே பிள்ளைகளையும் இணைத்துச் செயற்படும் இவர் ஆலடியான் அருள் பெற்று மேலும் பல ஆண்டுகள் வாழ "நாங்கள்" வாழ்த்துகிறோம்.

---

## 1.
## கலப்புத் திருமணம்

வயோதிபரும், வாலிபனும்...

வயோதிபர் : தம்பி கலப்புத் திருமணம் என்றால் என்ன?

வாலிபன் : வேறுபட்ட மதங்களைச் சேர்ந்த, இனங்களைச் சேர்ந்த, சாதிகளைச் சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் நடப்பது.

வயோதிபர் : என்னதான் வேறுபட்டாலும் மனிதனுக்கும் மனிதனுக்கும் தானே திருமணம் நடக்கிறது, இதுக்கு பெயர் கலப்புத் திருமணமா...? மனிதனும், மிருகமும், மனிதனும் பறவையும், மனிதனும் ஊர்வனவும் திருமணம் செய்தால் அது கலப்புத் திருமணம்.

வாலிபன் : ................? ................? ..........?

## 2.
## வயோதிபரும், வாலிபனும்

ஒரு முதியவர் கையில் ஒரு தடியுடனும், தலையில் ஒரு பெட்டியையும் சுமந்து கொண்டு தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார். அவ் வழியில் வந்த வாலிபன் பெரியவரைப் பார்த்து "என்ன பெரியவரே அப்படி என்னத்தை சுமக்க முடியாமல் சுமந்து செல்கிறீர்கள்" எனக் கேட்டான். பெரியவரின் பதில் இப்படி இருந்தது.

"தம்பி, நான் ஒரு கிராமத்தையும், இரண்டு மாவட்டத்தையும் கொண்டு செல்கிறேன் என்றார். வாலிபனுக்கு புரியவில்லை. முதியவர் பின்வருமாறு விளக்கினார்.

கையில் உள்ள தடியைக் காட்டி தம்பி இது கை(த்)தடி ஒரு கிராமம். கூறிக்கொண்டே தலையில் உள்ள பெட்டியை கீழே வைக்கிறார், அதற்குள் ஒரு கிளியும் நொச்சி இலையும் இருந்தது. அவை இரண்டையும் வாலிபன் கையில் கொடுத்து கிளிநொச்சி மாவட்டம் என்றார்.

வாலிபனுக்கு இப்போது குழப்பம் அதை பெரியவரிடமே கேட்டான். "பெரியவரே! இரண்டு மாவட்டம் என்றீர்களே, இன்னொரு மாவட்டம் எங்கே?" என்று கொஞ்சம் நக்கலுடன் கேட்டான்.

பெரியவர் பெட்டியைக்காட்டி என்ன இருக்கு என்று கேட்டார், வாலிபன் ஒன்றும் இல்லை என்றான்.

அப்போ பெட்டி காலி, காலியும் ஒரு மாவட்டம் தானே என்று சொல்லிவிட்டு பெரியவர் சென்றுவிட்டார்.

-செல்லக்குட்டி கனகசபாபதி-

## எமதூர் பற்றிய மீள் நினைவு
## அழகிய அந்தக் காலம்...

ஆலடியான் சிவராத்திரி அழகாய் ரசித்த காலம் வளை
மரம் காட்டுத்தடி கிடுகு தூக்கி அழகான அரங்கு போட்டு
ஊரெல்லாம் கட்டில் தூக்கி மேடை அமைத்து நாடகம்
பார்த்த காலம் அது... அழகிய அந்தக் காலம்...
அண்ணாச்சாமியின் சீனுடன் சின்னத்துரை அம்மான்
சின்ன சிரிப்புடன் வந்திறங்க ஆறுமணியாகும்..
சின்னத்துரையர் ஒரு சிரிப்புநாடகத்துக்கும்
ரெடியாத்தான் நிற்பார் பணக்காரவீட்டு பெற்றோமாக்ஸ்
லயிட்டுகள் ஒளிபாச்ச
ரெடியாய் தேடாக்கயிற்றில் தொங்கிடும்... எட்டுமணிக்கு
கோழியர் மேக்கப்புக்கு வந்திடுவார்... ஊரெல்லாம்
தேடியெடுத்த சாரி சட்டையுடன்... நடிகர்கள் வரவும்
மேக்கப்பு தொடங்கிடும்..
இதை விடுப்புப் பார்க்க கிடுகு அடைப்பில்
பொட்டு வைத்து பார்ப்பதில் கிடைத்த சந்தோசம்...
அழகிய அந்தக் காலம்தான்
பத்து மணிக்கு ஆர்மோனியப் பெட்டியுடன்
பொன்னையா அப்பாவும்
மிருதங்கத்துடன் அண்ணனும் ஏறிவிட்டால்
அரங்கு களைகட்டும்..
பழக்ககாரரின் நாடகம் முதலில்...
பரமானந்தம் வாத்தியாரின் நாடகம் இரண்டாவது..
மேடையில் இருந்து எட்டிப்பாக்க
ரசிகர்கள் அயர்வு போல தெரிய
சின்னத்துரை அம்மானும் சின்ராசண்ணையும்
அழகண்ணையும் அத்தான் கனகசபாபதியும் சேர்ந்து ...
ஒரு வழிப்பு வழித்துவிட சனம் சிரித்த சத்ததில்...
செகண்ட் சோ பார்த்த
பொடியளே கோயிலடியில் நிற்பாங்கள்..
இது அழகிய அந்தக்காலம் அது..
அனந்தண்ணையும்
அண்ணன் விவேகானந்தனும் அரசண்ணையும்
சேர்ந்த காத்தான் கூத்தும்...
அதிலை பாக்கியண்ணையும்
அழகண்ணையின் அட்ட காசமும்
அரங்கினை நிமிரவைக்கும்...
போதுமான முறை அரங்கேறினாலும்
திகட்டாத சுவைகொண்ட நாடகம் ..
இது அழகிய அந்தக்காலம்..
தம்பிஅய்யா மாமாவும்...
கிளிமாமாவும் கூடவே
வைரமுத்துவும் அண்ணாசாமியும்
வேதாரணியமும் அய்யாத்துரையும் சேர்ந்து அரங்கேற்றும்
அரிச்சந்திரா மயானகாண்டமும்..
காண நாலூர்ச் சனமும் திரள்வது அழகிய அந்தக்காலம்..
இடைக்கிடை காத்துக் குறையும்
பெற்றோமாக்ஸ்க்கு காத்தடிச்சு
காதலில் சிக்கி கலியாணம் கட்டியோர் காலமும்..
அந்தக்காலம் காலையில் போட்டுக்கிடந்த காசு பொறுக்கத்
திரிந்த காலமும்
அந்த அழகிய காலம்தான்.
நாடகமும் முடிந்து பூசையும் முடிந்து...
அவசரம் அவசரமாய் சமைத்த பாரணைச் சோறை...
நாலைந்துவீட்டில் சாப்பிட்டு சந்தோசப்பட்டுத் திரிந்ததும்
அழகிய அந்தக்காலம்
புலம்பெயர்ந்து சென்றும்...
அந்தக்கால இனிமையை நினைத்து
இந்த சிவராத்திரி இரவில் மனதில் பட்டதை
கிறுக்கி மறுக்கி...
முகநூலில் பதிவிடுவதில் உள்ள ஆனந்தம்...
ஆனந்தமே...

- ந.செல்வரத்தினம்(அரி)




எமதூரைச் சேர்ந்த கருணைவேல் கௌரி தம்பதிகளின் மகன் சஞ்ஜிதன் அவர்களுக்கும் கொழும்பைச்சேர்ந்த தயானந்தம் பிரியகுமுதினி தம்பதியினரின் மகள் பிரார்த்தனா அவர்களுக்கும் 6.4.2022 அன்று திருமணம் நடந்தேறியது.

● அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் 07.04.2022 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பித்து வெகு சிறப்பாக நடைபெற்றது.

● அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் நாகமுத்து தங்கம், பொன்னையா மாணிக்கம் குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட வில் மண்டபத்தின் இரு பக்க சிறகு மண்டபங்களின் திறப்பு விழா 07.05.2022 க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. மண்டபம் பற்றிய திறப்புரைகளை திரு தி.செல்வநாதன், திரு வி. செந்தூரன் நிகழ்த்தினார்கள்.

எம்மவர்கள் சிறுகதை - 4



# தவறுக்காக அல்ல

■ க.தர்மதேவன்

முதற்பாடமணி ஓங்கி ஒலிக்கிறது. நெஞ்சு படபடக்கத் தொடங்குகிறது.

"இண்டைக்கு அவமானப்பட வேண்டியது தான்!"

எங்கள் வகுப்பாசிரியர் செந்திவேல் ஸேர் கையில் பிரம்புடன் கறுப்பு நிறத் தோற்பையைத் தோளில் கொளுவித் தொங்கவிட்டுக் கொண்டு வகுப்பை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார். "இண்டைக்கு என்னத்தைச் சொல்லிச் சமாளிக்கப் போறன் எண்டுதான் எனக்குத் தெரியேல்லை". மனம் ஒரு நிலையில் இல்லாது தவிக்கிறது.

நேற்று வீட்டு வேலியடைப்பு ஐயாதான் பிரதான பணியாள். நான் அவர் எடுபிடி. உதவிஆள் இல்லாமல் அவரால் இயங்க இயலாது. நான் அவர் பக்கத்தில் நிற்கவேண்டும். வேலி அடைக்கிறதெண்டால் ஐயாவுக்கு ஒரு கலை. ஏதோ பல பொறியியலாளர்கள் சேர்ந்து திட்டமிட்டு கட்டிமுடித்த பெரிய கட்டடம் ஒன்றைப் பார்க்கின்ற திருப்தி தான் அடைத்த வேலியைப் பார்க்கும் போது அவரிடமிருக்கும். தெருவோரமாக இருக்கும் படலைப்பக்க வேலி. வெகு அக்கறையாக அந்த வேலியை அடைப்பார். பனைமட்டைகளை வைத்து வரிந்து மேலே தென்னங்கிடுகைக் கொண்டு அமைக்கப்படும் வேலி காண்போர் கண் களைக் கவரும் நேர்த்தியானது. "ராசண்ணை இது மாதிரி எங்கட வேலியையும் நீங்கள் தான் அடைச்சுத் தரவேண்டும்" உறவினரின் வேண்டு கோளைக் கேட்கும் போது ஐயாவுக்கு பெருமையும்ஒருவித கர்வமும் பிறந்து விடும் கூடவே குசி வந்து விடும் குசி வந்தால் அடிக்கடி செருமிக் கொள்வார். சௌந்தரராஜனின் பாடல்களை மெல்லிய குரலால் முணுமுணுத்துக் கொண்டு இருப்பார். அந்த நேரம் பார்த்துத்தான் நான் ஐயாவிடம் ஏதாவது காரியம் சாதித்துக் கொள்வேன். பட்டம் ஏற்று வதற்கு நூலுக்கு காசு, பள்ளிக்கூட தவணைப் பணம் இப்படி எது வென்றாலும் கேட்டுவைப்பென். உடனே கிடைத்து விடும். தன்னைப்போல தன் பிள்ளைகள் கூலிக்காரர்களாக வாழக்கூடாது என்பதில் கருத்தளவில் ஐயா உறுதி யாகவே இருக்கின்றார். வீட்டு வேலை என்று வந்து விட்டால் உதவி இல்லாமல் அவர் தான் என்ன செய்வார்? எனக்கும் ஐயாவோடை சேர்ந்து வேலியடைக்கிற தெண்டால் நல்ல விருப்பம். பள்ளிக்கூடத்தில் நாலு சுவருக்குள் ஆறு மணித்தியாலம் அடைஞ்சு கிடந்து சித்திரவதை அனுப விப்பதைவிட வீட்டில் ஓடியாடி வேலை செய்யும் போது எவ்வளவு சந்தோசம் கிடைக்கிறது.

"பெடியா, நாளைக்கு பள்ளிக்கூடம் இல்லைத் தானே?"

"ஓம் ஐயா!"

"அப்ப நாளைக்கு வேலியடைப்பம்?"

ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய வேலியடைப்பு திங்கள் வரை தொடர்ந்தது. இதனால் நேற்று நான் பள்ளிக்கூடத்துக்கு வரமுடியவில்லை. எங்கள் கல்லூரி யின் "டிசிப்பிளின் ரீச்சர்" செந்திவேல் ஸேர். அவர் தான் எனது வகுப்பாசிரியர். அவருக்கு பாடசாலை ஒழுங்கு முக்கியம். ஒருநாள் மட்ட மடித்தால் மறுதினம் மனிசன் எகிறிக் குதிப்பார். அதுவும் முன்னறிவித்தலின்றி நின்று விட்டால் அடுத்த கதை இராது. அடியும், நக்கல் நையாண்டிகளும் தாராளமாய் கிடைக்கும்.

இப்படியான ஆசிரியரை யாருக்குப் பிடிக்கும்? அவருக்கு என்மீது ஒரே வெறுப்பு. அவருடைய பாரா பட்டசமான நடைமுறைகளும். வாயிலிருந்து உதிர்க்கும் வார்த்தைகளும் என்னைக் கொல்லாமல் கொல்லும். ஒரு நாள் அவர் எங்களுக்குப் பழமொழிகள் படிப்பித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு பகுதியைக் கூறுவார். அவர் குறிப்பிடும் மாணவன் அதனை முழுமையாகச் சொல்லி முடிக்க வேண்டும்.

"கிட்டாதாயின்...
பிரதீபன் நீ சொல்லு ?"

"வெட்டன மற ஸேர்"

"ஊருடன் பகைக்கின்...
அருட்செல்வம் நீ சொல்லு?"

"வேருடன் கெடும் ஸேர்"

இப்போது என்னுடைய முறை. அந்தநேரம் பார்த்து பியோன் வகுப்புக்குள் நுழைந்து அதிபரின் அறிவித்தல் கொப்பியை நீட்டுகின்றான். செந்திவேல் ஸேர் கண்ணாடியை அணிந்து கொண்டு வலு கவனமாக அதனைப் படிக்கின்றார். அந்த இடை வெளியில் வகுப்பில் சிறு சலசலப்பு அந்தக் குழப்பத்தால் திடீரெனக் கோபம் கொண்டவராய்.

"நாலும் இரண்டும்... நீ சொல்லு? என்கிறார்.

"ஆறு ஸேர்" என்கின்றேன்.

வகுப்பே கொல் என்று சிரிக்கிறது. சிரிப்புக்குரிய அர்த்தத்தை நான் விளங்கு முன்னரே எனது இரு கன்னங்களும் வீங்கின. "ஆலும் வேலும்" என்று அவர் ஆரம்பித்து வைத்திருந்தால் நான் சரியான விடையைக் கூறியிருப்பேன். அவர் அப்படிக் கூறாது விட்டதால் என்னால் சரியான முடிவை ஊகிக்க முடியாமல் போய்விட்டது. அவர் ஏன் அப்படிக் கூறினார் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் அதன் பின் என்வகுப்பு மாணவர்கள் என்னைக் கண்டதும் "நாலும் இரண்டும் ஆறு" என்று கூறி கிண்டலடிப்பது அவமானமாக இருக்கும்.

என்மீது ஏற்கனவே வெறுப்புடன் இருக்கும் ஆசிரியருக்கு எப்படி முகம் கொடுக்கப் போறதென்று தான் தெரிய வில்லை.

"குட்மோர்ணிங்... ஸேர்"

மாணவர்களின் வழமையான கோரஸ் குட்மோர்ணிங். சிறடவுண் கூறிக்கொண்டே "நேற்று நாங்கள் தமிழில் ஆகுபெயர்கள் படிச்சனாங்கள் என்ன? என்று வழமையான பாணியில் தனது பிரசங்கத்தை ஆரம்பிக்கின்றார். அப்போது அவர் கழுகுக் கண்களுக்கு நான் தென்படுகிறேன். அவர் பார்வைக்கு அஞ்சி நான் தலை கவிழ்ந்து கொள்கின்றேன்.

"ம்... சரி"

"நேற்று பள்ளிக்கூடம் வராத ஆக்கள் இஞ்சாலை வாருங்கோ"

நானும் நாகேஸ்வரனும் தான் எழுந்து வருகின்றோம். எனக்குச்சற்று ஆறுதல் துணைக்கு ஒரு ஆள் கிடைத்து விட்டாரல்லவா? அவனுடைய தந்தை யார், மகன் பாடசாலைக்கு வருகை தராததற்குரிய காரணத்தை தெளிவாக எழுதிக் கொடுத்திருந்தார். முதலில் அவனிடம் தான் விசாரணைக் கடிதத்தை வாசித்துவிட்டு ஒருவித பிரமிப்புடன் "நீ மனேச்சற்றை மகனேயடா? இவ்வளவு நாளும் தெரியாமல் போச்சுது ஏன்ரா பெடியா எனக்குச் சொல்லேல்லே? சரி... எப்படி அப்பா சுகமா இருக்கிறாரே! நான் விசாரிச்சதா சொல்லு...ம் போய் இருடா தம்பி" அவன் ஒரு சிரிப்புடன் போய் அமர்கின்றான்.

நான் இப்போது தனித்தீவில் நிற்பதுபோல உணருகின்றேன், வகுப்பில் எல்லோருடைய கண்களும் என்னை மொய்கின்றன

"ஆ... நீ... வா..."

"உனக்கென்னடா? பாட்டி செத்துப்போனாளோ? பூட்டன் செத்துப் போனானோ?"

"இல்லை ஸேர்!" வார்த்தைகள் தடுமாறுகின்றன.

"இல்லையெண்டால்... என்ன? என்ன முழிமுழிக்கிறாய் களவுக்குப் போனனீயே?" ஏளனமாகச் சிரிக்கிறார். வகுப்பில் சிரிப்பொலி. நான் கலங்கிக் கொண்டு நிற்கிறேன். என்னுடைய முகத்தைக் குறிப்பாகப் பார்க்கின்றார். "அட மீசையும் அரும்பத் தொடங்கி விட்டுது, குமரப்பருவும் போட்டிருக்கு? பத்தாம் வகுப்பிலேயே உனக்கு எல்லாம் முளைச்சிட்டுது போலக் கிடக்கு?" வகுப்பறை சிரிப்பினால் கலகலக்கிறது அடிக்கடி வாய்த்தர்க்கம் புரியும் மொனிற்றர் இந்துமதியும் என்னைப் பார்த்து பார்த்து சிரிக்கின்றாள். நான் அவமானத்தில் குறுகிப்போகிறேன். என்னமோ தெரியாது, அவள் மீது என் கவனம் அடிக்கடி படிகிறது. அதை வெறுப்பென்பதா அல்லது விருப்பென்பதா? விருப்பால் விளைந்த போலியான வெறுப்பா? எப்படிக் கூறுவதென்றே தெரியவில்லை.

"சொல்லென்ரா...?" பேயன் மாதிரி முழுசிறாய்..."

கதிரைமீது சார்த்திக் கிடக்கும் பிரம்பு அவர் கைக்கு மாறுகின்றது. "நான் கேட்டுக் கொண்டு இருக்கிறன் நீ பேசாமல் நிற்கிறாய் என்ன" முழங்காலுக்குக் கீழே விளாசுகிறார்.

"ஸேர்... ஸேர் அடிக்காதையுங்கோ" வேதனையில் துடித்துத் துடித்து கெஞ்சுகின்றேன். அவர் கை ஓயவில்லை.

"ஸேர்... சொல்லுறன்ஸேர்... சொல்லுறன் ஸேர்... ஸேர் ஐயாதான் மறிச்சவர்... அடியாதையுங்கோ!"

"கொப்பர் என்ன விதானையே!"

இனிமேல் மறைக்கேலாது சொல்லி விட வேண்டியதுதான்

"நேற்று வீட்டிலை வேலி அடைச்சனாங்கள். அது தான் ஐயாவுக்கு உதவியாய் நின்றனான்.

"கொப்பரோட திரிஞ்சு வேலிஅடைக்க வேண்டியது தானே! பிற கென்னத்துக்கு இங்க வாறாய்? உங்களுக்கெல்லாம் என்னத்துக்குப் படிப்பு? வாடா கிட்ட... திரும்பு"

நான் நடுநடுங்கிக்கொண்டு திரும்புகின்றேன். அவர் கையிலுள்ள பழுத்த பிரம்பு மூர்க்கமாக என் பிற்பக்கத்தை பதம் பார்க்கின்றது நான் துடி துடித்துக் கத்துகின்றேன். எனக்கு ஒன்று விளங்குகிறது, இந்த அடிகள் எல்லாம் நான் நேற்று வராததுக்கல்ல. ●

**துவாரகன் சுஜீபா தம்பதியினருக்கு 2022.3.05 அன்று இதழி என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.**